ஐயா! நின் நினைவிடத்தில் சூளுரை ரைப்போம்!



ஈரோட்டு நாயகனே! தமிழர் தங்கள்
இனமானச் சூரியனே! எட்டுத் திக்கும்
மார்தட்டிச் சுழன்றுவந்தாய்! மனித னுக்கு
மானமும் அறிவும்தான் அழகே என்றாய்!
கூர்மிக்கச் சிந்தனையால் குரல்கொ டுத்தாய்!
கொட்டாவித் துயில்கலைத்தாய்! எழுச்சி தந்தாய்!
போராடி உரிமைகளைப் பெற்றுத் தந்தாய்!
பொதுப்பணிக்கே கொடைதந்தாய் உனது வாழ்வை!

பாடிவைத்த பழமைகளைச் சாடி வைத்தாய்!
பாமரர்க்கும் பகுத்தறிவை விதைத்தாய்! மூடக்
காடெரித்த யுகக்கனலே! ஐயா, உன்றன்
கைத்தடியின் வளைவிலும்கம் பீரம் உண்டே!
தாடிவைத்த குழந்தைநீ சிரிக்கும் போதில்
தலைமுதல்பா தம்வரைக்கும் மகிழ்ச்சி பொங்கும்!
ஏடெடுத்தே நீ.கணைகள் தொடுக்கும் போதில்
எதிரிகளின் அடித்தளமே நொறுங்கிப் போகும்!

மூன்றுவிழுக் காடுள்ள ஒருகூட் டத்தின்
மூவாயி ரம்வருட ஆதிக் கத்தைச்
சான்றுசொல்லி உலகுக்கே எடுத்து ரைத்தாய்!
சனானத்தின் கொடுமைகளைத் தோலு ரித்தாய்!
ஆன்றோராய் சான்றோராய் கல்வி பெற்றே
அடித்தட்டு மக்களையும் உயரச் செய்தாய்!
தோன்றின்நற் புகழோடு தோன்றி வந்தாய்!
தொண்டுசெய்து பழுத்தபழம் ஆகி நின்றாய்!

அலைவைத்த கடலைப்போல் இயங்கி வந்தாய்!
ஆயிரமா? அதற்கதிகம் பிறைகள் கண்டாய்!
வலைவைத்துப் பார்த்தார்கள், அறுத்தெ றிந்து
வலம்வந்தாய் நாடெங்கும்! கொண்டு வந்து,உன்
தலைவைக்க வேண்டும்என்ற நரிக்கூட் டத்தைத்
தரைமட்டம் செய்தாய்! நம் கலைஞ ருக்குச்
சிலைவைத்துப் பேரன்பைப் பொழிந்தாய்! என்றும்
சிதையாத புகழுக்கே புகழ்கொ டுத்தாய்!

தடியெடுத்து நீஅன்று நடந்த தால்தான்
தமிழர்க்கே அறிஞர்அண்ணா கிடைத்தார்! உன்றன்
குடியரசின் உலைக்கூடத் தகிப்பி லேதான்
“ குவளைப்பூ” போர்க்கருவி ஆன தென்பேன்!
திடலுக்குள் மட்டும்நீ இல்லை! கண்ணீர்த்
திவலைகளைத் துடைத்தெறிந்து சொல்வேன், எங்கள்
உடலுக்குள் உயிரணுக்க ளெல்லாம் உள்ளாய்!
உனைவிட்டுத் தமிழர்க்கு வரலா றேது?

அரியார்க்கும் அரியாராய் பிறந்து வந்தாய்!
அடுத்தடுத்துச் சாதனைகள் புரிந்து வந்தாய்!
வரலாற்றில் “ஈழவர்”தம் உரிமை வென்ற
“ வைக்கம்நூற் றாண்டு”இது! மறக்கப் போமோ?
பெரியார்க்கும் பெரியார்நீ! அதனா லன்றோ
பெண்ணுரிமை முன்னுரிமை காணச் செய்து
சரியான பாதைக்கே அழைத்து வந்தாய்!
சமத்துவம் சமதர்மம் தழைக்கச் செய்தாய்!

வியாபாரக் குடும்பத்தில் பிறந்தாய்! உன்னை
விலைபேச எவராலும் முடிய வில்லை!
நியாயத்தின் வடிவம்நீ, அதனால் உன்னை
நீதிமன்றப் பொய்வலைகள் நெருங்க வில்லை!
தியாகம்நீ செய்யவில்லை! தியாகம் உன்னைச்
செய்தது!நீ தரைவாழ்ந்த உலக வாழ்க்கை
மயானத்தின் முடிவல்ல! காலத் தாலும்
மடியாத சரித்திரத்தின் புதுத்தொ டக்கம்!

நீண்டநெடுந் தொலைநோக்கில் உனது கொள்கை
நீட்சிகண்டு “தளபதி”யின் ஆட்சி கண்டு
தாண்டிமிகக் குதிக்கிற து பகைவர் கூட்டம்!
தலைதூக்கி “மனுதர்மம்” போடும் ஆட்டம்!
மீண்டும்உன்றன் “கைத்தடிக்கு” வேலை வந்து
விட்டதையா! சனாதனத்தை விரட்டு தற்கே!
மூண்டெழுவோம் ஐயா,உன் நினைவி டத்தில்!
முறியடிப்போம் சதியை!எனச் சூளு ரைப்போம்!

- கவிச்சுடர்
கவிதைப்பித்தன்

டி.ஈ.பரணிகுமார் ஏற்பாடு !

13 வது வட்டத்தில் அண்ணா பிறந்த நாள் நிகழ்ச்சி !

இரா.முருகேசன் - ஏகா.கார்த்திகேயன் பங்கேற்பு!

சென்னை செப்:17 - பேரறிஞர் அண்ணா அவர்களின் 115வது பிறந்த நாளை முன்னிட்டு 13வது வட்டம் சாத்துமா நகர் பகுதியில் அமைந்துள்ள பேரறிஞர் அண்ணா அவர்களின் திரு வுருவச்சிலைக்கும் முத் தமிழறிஞர் கலைஞர் அவர் களின் திருஉருவச் சிலைக் கும் மாலை அணிவித்து மரியாதை செய்யப் பட்டது.

இந்நிகழ்வில் தலைமை பொதுக்குழு உறுப்பினர் இரா.முருகேசன் முன்னி லையில் டி.ஈ. பரணிகுமார் ஏற்பாட்டில் 14(அ)வது வட் டக் கழக செயலாளர் ஏகா. கார்த்திகேயன், முன்னாள் வட்டக் கழக செயலாளர் மாமன்ற உறுப்பினர் பண்ணை சந்திரசேகர், ரவிச்சந்திரன், சுற்றுச்சூழல் அணி மாவட்ட துணை அமைப்பாளர் பா.பாலஉ மாபதி,13 வது வட்ட நிர் வாகிகள் கே.எஸ்.ஆனந் தன்,

ஜே.கருணாநிதி, ராம் ராஜ்,ஜே.சுந்தரம், தா.கதிர வன், நா.அணில்குமார், தாமோதரன்,சரவணன், சீனிவாசன் உள்ளிட்ட கழ கத் தோழர்கள் பலர் கலந்து கொண்டு மலர் தூவி மரி யாதை செய்து பொதுமக்க ளுக்கு இனிப்பு வழங்கி கொண்டாடப்பட்டது.

சனாதனம் குறித்து சங்கு ஊதி தற்காத்துக்கொள்ள மோடி முயலும் சூழலில்

இரண்டே ஆண்டுகளில் வாக்குறுதிகளை நிறைவேற்றும் தி.மு.க. அரசைப் பாராட்டுகிறோம்!

‘கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தை வரவேற்று - இரா.முத்தரசன் அறிக்கை!

சென்னை, செப்.17

‘கலைஞர் மகளிர் உரி மைத் திட்டத்தை’ வரவேற்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி யின் தமிழ் மாநிலச் செயலா ளர் இரா.முத்தரசன், விடுத்து ள்ள அறிக்கை வருமாறு:

கடந்த சட்டமன்ற தேர்த லில் கொடுத்த வாக்குறுதியை பலவற்றை நிறைவேற்றி யுள்ள தமிழ்நாடு அரசு, தற் போது முத்திரை பதிக்கும் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தை நிறைவேற்றி யுள் ளதை, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி தமிழ்நாடு மாநில செயற்குழு பாராட்டி வர வேற்கின்றது.

இத்திட்டத்தின் மூலம் தமிழகத்தை சேர்ந்த, ஏழை, எளிய, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட,

பட்டியலின மக்கள் உட்பட தகுதி வாய்ந்த ஒரு கோடியே ஆறு லட்சத்து ஐம்பதாயிரம் தாய்மார்களும், சகோதரிக ளும் பயன் அடைகின்றனர்.

மாதம் ரூபாய் ஆயிரம் வீதம் ஆண்டிற்கு பணிரண் டாயிரம் ரூபாய் ஒவ்வொரு வரும் பயன் பெறுகின்றனர். இத்திட்டத்தின் பயனாளி கள் பணம் பெறுவதற்கு அலைந்திட வேண்டிய அவசி யமில்லை. அவரவர் வங்கிக் கணக்கில் பணம் அனுப்புவ துடன் அவரவர் தேவைக்கு ரிய காலத்தில் ஏடிஎம் கார்டு மூலம் பெற்றுக் கொள்வதற் கான வசதிகளும் முழுமை யாக செயல்படுத்தப் பட்டுள்ளது.

பொருளாதார நெருக்கடி கள், ஒன்றிய அரசின் ஒத்து ழைப்பு இல்லாமை போன்ற கடும் நெருக்கடிகளுக்கு மத் தியிலும், தான் கொடுத்திட்ட வாக்குறுதியை நிறை வேற் றிட வேண்டும் என்கிற மன உறுதியுடன் நிறைவேற்றிய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களைப் பாராட்டி வாழ்த் துகின்றோம்.

தமிழக அரசு மேற்கொண்ட இத்தகைய புரட்சிகரமான திட்டத்தை மற்ற மாநிலங்க ளும் பின்பற்றத் தொடங்கியி ருப்பதன் மூலம் இத்திட்டம் எத்தகைய வரவேற்பைப் பெற்றுள்ளது என்பதை உணர முடியும்.

தமிழ்நாட்டின் பிரதான எதிர்க்கட்சியான அ.தி.மு.க. இத்திட்டத்தை வரவேற்கி றதா? அல்லது எதிர்க்கின்றதா என்பது குறித்து வெளிப்ப டையாக அறிவிக்க வேண்டும்.

அதே போன்று ஒன்றியத் தில் ஆளும் கட்சியாக உள்ள பா.ஜ.க. இத்திட்டம் குறித்து தனது நிலை என்னவென்பத னையும் பகிரங்கமாக தெரி வித்திடல் வேண்டும்.

நாள்தோறும் அறிக்கைக ளும், பேட்டிகளும் அளித்து வரும் பா.ஜ.க.வின் மாநில நியமன தலைவர் அண்ணா மலை இத்திட்டம் குறித்து தனது நிலைபாட்டை வெளிப் படுத்திட வேண்டுகிறோம்.

ஒன்றிய அரசு குறிப்பாக பிரதமர் மோடி 2014ம் ஆண்டு கொடுத்திட்ட ஆண் டுக்கு 2 கோடி பேருக்கு வேலை, கறுப்பு பணத்தை மீட்டு இந்திய குடிமகன் ஒவ்வொருவருக்கும் ரூ.15 லட்சம் வங்கியில் வரவு வைத் தல், விலைவாசி உயர்வை கட்டுப்படுத்தல், விவசாயிக ளின் வருமானத்தை இரட் டிப்பாக்கல் என எந்த ஒரு வாக்குறுதியையும் கடந்த 10 ஆண்டுகாலமாக நிறை வேற் றவில்லை. மாறாக சனாதனம் குறித்து சங்கு ஊதி தற்காத்து கொள்ள மோடி முயலும் சூழ லில் ஆட்சிக்கு வந்த இரண்டே ஆண்டுகளில் கொடுத்த வாக்குறுதிகள் ஒ வ்வொன்றையும் நிறைவேற் றிக் கொண்டுள்ள திமுக அரசைப் பாராட்டுகின்றோம்.

இவ்வாறு அவர் தனது அறிக்கையில் குறிப்பிட்டு ள் ளார்.

சென்னையில் உள்ள அனைத்துப் பள்ளி மாணவர்களுக்கும் - செப்.16 முதல் 25 வரை

‘மெட்ராஸ் ஐ’ கண் பரிசோதனை தொடர் முகாம்!

மருத்துவம் - மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தொடங்கி வைத்தார்!

சென்னை, செப். 17 - மருத்துவம் மற்றும் மக் கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பி ரமணியன் நேற்று (16.9.2023) சென்னை, செ.தெ.நாயகம் தியாகராயநகர் மேல்நிலைப் பள்ளியில், சென்னையில் உள்ள அனைத்து பள்ளி மாணவ மாணவியர்களுக் காக மெட்ராஸ் ஐ கண் பரி சோதனை தொடர் முகா மினை (செப் 16 முதல் செப் 25 வரை) தொடங்கி வைத்து ஆய்வு மேற்கொண்டார்.

பின்னர் அவர் செய்தியா ளர்களிடம் தெரிவித்த தாவது;

கடந்த வாரம் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, எழும் பூர் கண் மருத்துவமனைக்கு சென்று, மெட்ராஸ் ஐ நோயி னால் பாதிக்கப்பட்டவர்க ளுக்கு எத்தகைய சிகிச்சை அளிக்கப்படுகிறது, முன் னெச்சரிக்கை நடவடிக்கை கள் குறித்து ஆய்வு செய்யப் பட்டது. ஒவ்வொரு பருவ மழைக்கு முன்னரும், இத்த கைய பாதிப்புகள் ஏற்படுவது இயல்பு என்றாலும், இத்த கைய பாதிப்புகள் வராமல் தடுப்பது போன்ற பல்வேறு நடவடிக்கைகள் மருத்துவ துறை எடுத்து வருகிறது. அந்த வகையில் இன்று சென் னையில் உள்ள அரசு பள்ளி கள், தனியார் பள்ளிகள், மாநராட்சி பள்ளிகள் மற்றும் அரசு நிதிஉதவி பெறும் பள் ளிகளில் அனைத்திலும் உள்ள 12 இலட்சம் மாணவர் கள் பயன்பெறும் வகையில் பள்ளிகளில் செயல்படும் RBSK பிரிவும், எழும்பூர் கண் மண்டல ஆராய்ச்சி மைய மும், ஒருங்கிணைந்து மெட் ராஸ் ஐ கண் பரிசோதனை ஆய்வை மேற்கொள்ள வுள்ளது.

16.09.2023 முதல் 25.09.2023 வரை 10 நாட்க ளுக்கு சென்னையில் உள்ள அனைத்து பள்ளிகளுக்கும் பரிசோதனைகள் மேற்கொள் ளப்படவுள்ளது. 1918 ஆம் ஆண்டு சென்னையில் கண்ட றியப்பட்டதால் இதற்கு மெட்ராஸ் ஐ என்று பெயர் வைக்கப்பட்டது. இந்த நோய் கடும் வெப்பம் நில வும் காலங்களிலும், ஈரப்பத மான காலங்களிலும் இது பரவுவதாக சொல்லப்படுகி றது. அடினோ, எண்டோ, காக்சாகி போன்ற பல்வேறு வைரஸ்களால் இந்த நோய் பாதிப்பு ஏற்படுகிறது.

இந்த நோயினால் பாதிக் கப்பட்டவர்களுக்கு கண் வலி, கண் சிவந்து போகுதல், கண்களில் நீர்

வழிதலும், கண்களில் எரிச் சல் ஏற்படுதல் போன்ற அறி குறிகள் இந்த நோயின் அறி குறிகளாகும். கண்களில் அழுக்கு வெளியேறி இமைப் பகுதிகளில் ஒட்டிக் கொள்ளு வது இந்த நோயின் தன்மை யாகும். பாதிப்பு உள்ளவர் களை நேரடியாக பார்ப்பதினால் இந்த நோய் தொற்றாது, ஒரு வார காலத் திற்குள் இந்த நோய் குணம டையும். முகம், கண்கள் மற் றும் கைகளை அடிக்கடி சுத்தமான நீரினால் கழுவ வேண்டும், கண்களுக்கு நல்ல ஓய்வு கொடுக்க வேண்டும், கண் மருத்துவர்களின் ஆலோசனைகளை பெற்று தான் சொட்டு மருந்துகளை உபயோகிக்க வேண்டும், சுய மாக எந்த மருந்தினையும் உபயோகப்படுத்தக் கூடாது.

கண் நோய் பாதிப்பு ஏற் பட்டவர்கள் மற்றவரிடம் இருந்தும், ஆரோக்கியமான விட்டமின் ஏ மற்றும் விட்ட மின் சி சத்துள்ள உணவு களை உட்கொள்ளுவது மிக வும் அவசியமாகும். குஜராத், கோவா, மகாராஷ்டிரா, ராஜஸ்தான், புதுடெல்லி போன்ற பல்வேறு மாநிலங்க ளிலும் இந்த கண் நோய் கூடு தலாக தென்படுகிறது என்றா லும் அச்சம் கொள்ள தேவையில்லை. மேலும், பள்ளிக்கல்வித்துறை அமைச் சர் அவர்கள், அவர் சம்பந் தப்பட்ட துறை அலுவலர்க ளுக்கு மக்கள் நல்வாழ்வுத்து றை எடுக்கும் நடவடிக்கைக ளுக்கு உறுதுணையாக இருக்க அறிவுறுத்தியிருக்கிறார் .

இவ்வாறு அவர் தெரிவித் தார்.

இந்நிகழ்வில் சட்டமன்ற உறுப்பினர் ஜெ.கருணாநிதி, பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறை இயக்குநர் மரு.தி.சி. செல்வவிநாயகம், எழும்பூர் அரசு கண் மருத்துவமனை இயக்குநர் மரு.தங்கராணி, நோடல் அலுவலர் மரு.சந்தி ரகுமார், பொது சுகாதாரத் துறை இணை இயக்குநர் மரு. சண்முகசுந்தரம் மற்றும் உயர் அலுவலர்கள் உடனி ருந்தனர்.

திருவொற்றியூர் அரசு உயர் நிலைப் பள்ளியில்

கழக சுற்றுச்சூழல் அணி சார்பில் 1000 மரக்கன்றுகள் நடும் விழா !

கார்த்திகேயே சிவசேனாபதி , கே.பி.சங்கர் எம்.எல்.ஏ பங்கேற்பு !

சென்னை செப்:17 - முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு சென்னை வடகிழக்கு மாவட்ட தி.மு.க சுற்றுச்சூழல் அணி சார்பில் ஆயிரம் மரக்கன்றுகள் நடும் துவக்க விழா 16.09.2023 சனிக்கிழமை காலை திரு வொற்றியூர் தொகுதியில் கன் னியாகு குருகுலம் அரசு உயர் நிலைப் பள்ளியில் கே.பி. சங்கர் எம்.எல்.ஏ தலைமை யில் நடைபெற்றது.

நிகழ்ச்சியை கழக சுற்றுச்சூழல் அணியின் மாநில செயலாளர்,அயலக தமிழர் நலவாரிய தலைவர் கார்த்திகேய சிவ சேனாபதி துவக்கி வைத்து சிறப்பித்தார்.

நிகழ்ச்சி சுற்றுச்சூழல் அணி மாநில துணைச் செய லாளர் பழ.செல்வகுமார் முன்னிலையில் மாவட்ட அமைப்பாளர் பி.வெங்கடே சன் வரவேற்புரையில் நடை பெற்றது. மாவட்டத் துணை அமைப்பாளர்கள் ஏகா.கார்த் திகேயன், பா.பாலஉமாபதி, ஆகியோர் நிகழ்ச்சி ஏற்பாட் டில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் தலைமை செயற்குழு உறுப்பினர் வி. இராமநாதன், தலைமை பொதுக்குழு உறுப்பினர் இ ரா . மு ரு கே சன் , ப கு தி பொருளாளர் எம்.எஸ்.நாக லிங்கம், மாவட்ட ஐந்தாவது வட்ட மாமன்ற உறுப்பினர் கே.பி.சொக்கலிங்கம், இளை ஞரணி அமைப்பாளர் ஆர். டி.மதன்குமார்,

வர்த்தகர் அணி மாவட்ட துணைத் தலைவர் சுரேஷ்,

வட்டக் கழக செயலாளர் ஆர்.சந்தர், தலைமை கழக சொற்பொழிவாளர்கள் எழும்பூர் மு.கோபிநாத், வாசு.கருணாநிதி, சுற்றுச்சூ ழல் அணி சென்னை வடக்கு மாவட்ட அமைப்பாளர் லைன் தீனதயாளன், துணை அமைப்பாளர்கள் பகுதி துணைச் செயலாளர் கே.பிர பாவதி, மாவட்ட பிரதிநிதிகள் பி.எஸ்.சைலஸ்,

கே.கார்த்திகேயன், எம். அப்துல் சலீம்,குட்டி (எ) எத் திராஜ், கே.சந்தோஷ் குமார், மு.பகுதித் துணைச் செயலா ளர் ஈ.ரமேஷ், மாவட்ட நெச வாளர் அணி துணை அமைப் பாளர் எஸ்.எ.மணி, ஆதி திராவிடர் நலக்குழு மாவட்ட துணை அமைப்பா ளர் ஜெகன், மு.தொண்ட ரணி மகளிர் துணை அமைப் பாளர் ராதாதங்கவேல், கிழக்குப் பகுதி மீனவர் அணி துணை அமைப்பாளர்கள் எம்.எல்.வேலன், ஆர்.பிர கஷ், 13 வது வட்ட கழக நிர்வாகிகள் கே.எஸ்.ஆனந் தன், முத்துராஜ், ஜே.கருணா நிதி, இராமராஜ்,ஜெ.சுந்த ரம், டி.இ.பரணி குமார், நா.அணில்குமார், ஒய்.ஆர். ரவி சீனிவாசன்

14 ஆவது வட்ட நிர்வாகி கள் டைலர்பாபு, மைக்கேல்,

நேவிராஜ், எம்.பிரேம், தியாகராயபுரம் சங்கர், போட்டோ செந்தில், சாலக்க்ஷ, பந்தயம்சேகர், இரா.கணேசன், இணையத ளம் ஜே.யுவராஜ், இளைஞர் அணி மணலி.வி.குமார், எம். மனோஜ், சாரதிபா லாஜி,மணலி வினோத், இளைஞர் அணி அன்பு தம்பி கள் உள்ளிட்ட ஏராளமான கழக நிர்வாகிகளும் பள்ளி தலைமை ஆசிரியர் பி.எஸ். இந்துமதி, ஆசிரியர்களும் பள்ளி மாணவிகளும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

தாம்பரம் மாநகர கழக செயலாளர் எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ., முயற்சியின் பலனாக தாம்பரம் மாநக ராட்சி சிட்லப்பாக்கத்தில் நீர்வளத்துறைக்கு சொந்தமான இடத்தில் இருந்து அகற்றப்பட்ட ஆக்கிரமிப்பு களில் குடியிருந்த திருமதி பூர்ணிமா, சாந்தி, ஆதிலட்சுமி உள்ளிட்ட 20 குடும்பங்களுக்கு பெருங்களத் தூர் அன்னை அஞ்சுகம் நகரில் உள்ள தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய குடியிருப்பில் இலவசமாக வீடுகள் ஒதுக்கப்பட்டு, அதற்கான ஆணைகளை தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர். ராஜா பயனாளிகளுக்கு வழங்கினார். இந்நிகழ்வில் மண்டல குழுத் தலைவர், பகுதி கழக செயலாளர் டி.காமராஜ் உள்ளிட்டோர் உடனிருந்தார்.

திருவள்ளூர் கிழக்கு மாவட்டம், கும்முடிப்பூண்டி பேரூர் தி.மு.க சார்பில் பேரறிஞர் அண்ணா அவர்களின் 115 வது பிறந் தநாளை முன்னிட்டு அன்னாரின் திருவுருவச் சிலைக்கு மாவட்ட செயலாளரும், கும்முடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினருமான டி.ஜே.கோவிந்தராஜன் மலர்தூவி மரியாதை செலுத்தினார். கலைஞர் மகளிர் உரிமை திட்டத்தின் கீழ் பயன்பெற்ற பய னாளிகள் நிகழ்ச்சியில் பங்கேற்று தங்களின் நன்றியை தமிழக முதல்வருக்கு தெரிவித்தனர். நிகழ்ச்சியில் எம்.எல்.ரவி, எஸ்.ரமேஷ், இரா.அறிவழகன், பா.செ.குணசேகரன், மு.பாஸ்கரன், வழக்கறிஞர் அணி அமைப்பாளர் எஸ்.கோபி, சகிலா அறிவழகன், எம்.கேசவன், எம்.முரளிதரன், எம்.மோகன்பாபு, எஸ்.ராமஜெயம், டி.ஜெ.ஜி.தமிழரசன், கே.ஜி.நமச்சிவாயம், கவுன்சிலர் ஜெயசந்திரன், சுந்தரிஅன்பு, காமாட்சி, எஸ்.உதயகுமார், பா.பரத்குமார். சித்திக். எஸ்.எம்.திருநாவுக்கரசு, இ.எம். ராஜேஷ், லட்சுமி நாரயணன், சாண்டிலியன், அப்துல்கரீம், பி.அறிவழகன், நரேந்திரன், கருணாகரன், மு.இஸ்மாயில், ரா.ரமேஷ், முருகன், டி.கே.ராஜா, அர்ஜீனன், நந்தகோபால், மஸ்தான், டி.கே.காளி, பாலுமகேந்திரன், உமாபதி, அக்கீம், அலாவுதீன், மீனாட்சி, குப்பன், சாந்தி, அப்துல்லா, இளவரசன், கௌதம், மதுரை, அராப்பு பாபு, பா.பரத்குமார், போண்டா சிவா, சந்திரமோகன், ஏ.பார்த்திபன், விஜய், பாஸ்கர், பா.சுரேஷ், தமிழ்சாதிக், மு.வேதாச்சலம், தோக்கமூர் விஜய்குமார், கல்விசெல்வம், வெங்கடாதிரி, ஜெயராமன், பிரகாஷ், சுகுமாறன், உள்ளிட்ட கழகத் தோழர்கள் பங்கேற்றனர்.